SRI LANKA

**இலங்கை கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர்கள் கழகம்**

# மட்டம் III பரீட்சை – ஜூலை 2023

**(Level III Examination - July 2023)**

## வினாக்களும் பரிந்துரைக்கப்பட்ட விடைகளும்

## (303) நிதிக் கட்டுப்பாடுகளும் கணக்காய்வும் (FCA)


**இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியாளர்கள் கழகம்**
இல, 640, வண. முறுத்தெட்டுவெ ஆனந்த நாகிமி மாவத்தை,
நாரேஹன்பிட்டி, கொழும்பு - 05
தொ.பே - 011 2 559 669

கல்வி மற்றும் பயிற்சி பிரிவின் வெளியீடு

# இலங்கை கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர்கள் கழகம்
# மட்டம் III பரீட்சை – ஜூலை 2023
# (303) நிதிக் கட்டுப்பாடுகளும் கணக்காய்வும்
# பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(மொத்தம் 20 புள்ளிகள்)

**பகுதி - A**

## *வினா 01 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

*அத்தியாயம் 01- வணிக சூழல் மற்றும் கட்டமைப்பு*

**(a) பின்வரும் தொழிற்பாடுகளில் ஏதேனும் இரண்டினை எழுதியிருப்பின் முழு மதிப்பெண்கள் வழங்க அனுமதிக்கப்படும்.**

- டிரஷ்ட் பி.எல்.சீ யின் நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு, முன்வைத்தல் மற்றும் போதுமான அளவு வெளிப்படுத்தல்கள் இலங்கை கணக்கீட்டு நியமத்திற்கமைவாக காணப்படுகிறதா என்பதனை மேற்பார்வை செய்தல்
- டிரஷ்ட் பி.எல்.சீ யின் நிதி அறிக்கைப்படுத்தல் தேவைப்பாடுகளின் இணக்கம், கம்பனிச் சட்டத்தினால் வேண்டப்படும் தகவல்களுடனான இணக்கம், ஏனைய நிதி அறிக்கைப்படுத்தலோடு தொடர்புடைய ஒழுங்குபடுத்தல்கள் மற்றும் தேவைப்பாடுகளின் இணக்கம் போன்றவற்றை மேற்பார்வை செய்தல்
- இலங்கை கணக்கீட்டு நியமத்தின் தேவைப்பாட்டுக்கமைய டிரஷ்ட் பி.எல்.சீ உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் இடர் முகாமைத்துவம் போன்ற செயன்முறைகளை போதுமான அளவு கொண்டுள்ளதா என்பதனை உறுதிப்படுத்த மேற்பார்வை செய்தல்
- டிரஷ்ட் பி.எல்.சீ யின் வெளியக கணக்காய்வாளர்களின் சுயாதீனத்தன்மை மற்றும் செயல்பாட்டினை மதிப்பீடு செய்தல்
- வெளியக கணக்காய்வாளர்களின் நியமனம், மீள் நியமனம் மற்றும் நீக்கம் போன்றவை தொடர்பாக இயக்குனர் சபைக்கு பரிந்துரைகளை முன்வைத்தல்
- வெளியக கணக்காய்வாளர்களின் ஊதியம் மற்றும் பணிக்கமர்தலின் வாசகங்களினை ஒப்புதல் செய்தல்

***(03 புள்ளிகள்)***

**(b)**

***பின்வரும் நன்மைகளில் ஏதேனும் இரண்டினை எழுதியிருப்பின் முழு மதிப்பெண்கள் வழங்க அனுமதிக்கப்படும்.***

- இயக்குனர் சபை சார்பாக நிதிக் கூற்றுக்களை மீள்பார்வை செய்தல், நிதி அறிக்கைப்படுத்தலின் தரத்தினை மேம்படுத்தல்
- மோசடிக்கான வாய்ப்பினை குறைப்பதற்காக ஒழுக்கம் தொடர்பான மனநிலை, உறுதியான சூழல் கட்டுப்பாடு போன்றவற்றை உருவாக்குதல்
- தொடர்பாடல் செய்வதற்கான அலைவரிசை மற்றும் கவனத்திற்குரிய பிரச்சினைகளுக்கான மன்றத்தினை வழங்குவதன் மூலம் வெளிய கணக்காய்வாளர்களின் நிலையினை உறுதிப்படுத்துதல்
- முகாமைத்துவத்தோடு பிணக்குகள் இடம்பெறும் நிகழ்வுகளின் போது அவர்களின் சுயாதீனத்தன்மையை வலியுறுத்துவதற்கான விடயங்களை சட்டகத்தில் வழங்குதல்
- முகாமைத்துவத்திலிருந்து வேறுபடுத்தி பாரிய அளவு சுயாதீனத்தன்மையினை வழங்குவதன் மூலம் உள்ளக கணக்காய்வு தொழிற்பாட்டின் நிலையினை உறுதிப்படுத்தல்
- கணக்காய்வு அபிப்பிராயம் மூலமான வெளியக கணக்காய்வாளர்களின் சுயாதீனத்தன்மையினை கணக்காய்வு குழு கண்காணிப்பதன் ஊடாக நிதிக் கூற்றுக்களின் குறிக்கோள் மற்றும் அவற்றின் நம்பகத்தன்மையில் நம்பிக்கையினை அதிகரித்தல்

***(02 புள்ளிகள்)***

***(மொத்தம் 05 புள்ளிகள்)***

## ***வினா 02 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :***

***அத்தியாயம் 02 - இடர் முகாமைத்துவ சட்டகம்***

| | **இடர்** | **இடரினை கையாளுவதற்கு பயன்படுத்தப்படும் நுட்பங்கள்** |
|---|---|---|
| (1) | வங்கியில் வைப்புச் செய்வதற்காக குறிப்பிடத்தக்களவு பணத்தை எடுத்துச் செல்வது | **இடர் மாற்றல்:** ஒப்பந்தரீதியாக ஒரு இடரினை இன்னொரு நபருக்கு மாற்றுவதோடு தொடர்புபடுகின்ற இடர் முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாட்டு தந்திரோபாயம் இடர் மாற்றல் ஆகும்.<br>**செயல்:** காசு இழக்கப்படுதல் என்ற இடரை தவிர்த்துக் கொள்வதற்காக காப்புறுதி திட்டம் ஒன்றினை பெற்றுக் கொள்ளல் |
| (2) | தனியான ஓர் இடத்தில் அமைந்துள்ள உணவகத்தில் தொடர்ந்து நட்டங்கள் ஏற்படுவது | **இடர் தவிர்த்தல்:** ஒரு நிறுவனத்தின் சொத்துக்களை எதிர்மறையாக பாதிக்கும் ஆபத்துக்கள், செயல்பாடுகள், வெளிப்பாடுகளை முற்றாக தவிர்த்தல் ஆகும். இடர் முகாமைத்துவமானது அச்சுறுத்தும் நிகழ்வுகளின் நிதிரீதியான விளைவுகள் மற்றும் பாதிப்புக்களினை கட்டுப்படுத்த முயலுகின்றது ஆனால் இடர் தவிர்ப்பானது அவ் நிகழ்வினை ஒட்டுமொத்தமாக தவிர்ப்பதனை கூறுகிறது.<br><br>**செயல்:** நட்டம் ஏற்படுத்தும் உணவகத்தை மூடுதல் |



aat SRI LANKA

| | | |
|---|---|---|
| (3) | உணவகத்தின் தொழில்துறை தற்போது இலங்கையில் பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய துறையாக இருப்பது | **இடர் குறைப்பு:** இடர் என்பது குறைக்கப்படல் வேண்டும் என முகாமைத்துவம் தீர்மானிக்கலாம் ஏனென்றால் தற்போது அவை மிக அதிகமாகவும் ஏற்றுக் கொள்ளப்பட முடியாமலும் கானப்படுகிறது. இடரினை குறைக்கும் முறைகள் அவ் இடரின் தன்மையை பொறுத்து அமையும்<br>**செயல்**: செயல்பாடுகளை பல்வகைப்படுத்தல் |

***(05 புள்ளிகள்)***

## *வினா 03 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

***அத்தியாயம் 04 – உறுதியுரை பணிக்கமர்த்துதலும் தொடர்புபட்ட சேவைகளும்***

***பின்வருவனவற்றில் ஏதேனும் இரண்டினை விளக்கியிருப்பின் முழு மதிப்பெண்கள் வழங்க அனுமதிக்கப்படும்.***

**1. ஒழுக்க மற்றும் தரக்கட்டுப்பாடு தேவைப்பாடுகள்**

தொழில்சார் கணக்காளர்களுக்கு தேவையான ஒழுக்கக் கோவை மற்றும் தரக் கட்டுப்பாட்டு தேவைப்பாடுகளோடு பயிற்சியாளர் கட்டாயமாக இணக்கப்பாட்டுடன் காணப்படல் வேண்டும்

**2. பணிக்கமர்த்தலினை ஏற்றுக் கொள்ளலும் தொடர்ந்து செல்லுதலும்**

விடயப் பொருள், பொறுப்புவாய்ந்த தரப்பினர், பயன்படுத்த உள்ள பாவனையாளர் போன்றவற்றினை பயிற்சியாளர் கவனத்தில் எடுப்பதோடு பயிற்சியாளர் தொழில்சார் நபராகவும் இருத்தல் வேண்டும்

**3. பணிக்கமர்த்தலினை திட்டமிடல் மற்றும் செயற்படுத்தல்**

பயிற்சியாளர் பணிக்கமர்த்தலினை திட்டமிடுவதோடு பணிக்கமர்த்தலோடு தொடர்புபட்ட வாசகங்கள், விடயப் பொருள், நிபந்தனைகள், நிபுணர்கள் மூலமான ஆதாரங்களை கவனத்தில் கொள்ள வேண்டும்

**4. விடயப் பொருளின் பொருத்தமானதன்மையினை மதிப்பிடல்**

விடயப் பொருளானது கட்டாயமாக அடையாளம் காணக்கூடியதாக இருப்பதோடு, நிபந்தனைகளுக்கு எதிராக மதிப்பிடக்கூடியதாகவும், போதுமானதும் பொருத்தமானதுமான அளவு ஆதாரங்களை பெற்றுக் கொள்ளக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும்

**5. நிபந்தனைகளின் பொருந்தக்கூடியதன்மையினை மதிப்பிடல்**

பணிக்கமர்த்தல் தொடர்பான அறிவு முன்கூட்டியே பயிற்சியாளருக்கு இருத்தல் வேண்டும் அத்தோடு பயன்படுத்த இருக்கும் இருக்கும் நிபந்தனைகள் பொருத்தமானதாகவும் இருத்தல் வேண்டும்

**6. உறுதிப்பாடு பணிக்கமர்த்தல் இடர் மற்றும் பொருண்மைத்தன்மை**

உறுதிப்பாடு பணிக்கமர்த்தலின் பொருண்மையான இடர்கள் பயிற்சியாளரினால் உறுதிப்பாடு பணிக்கமர்த்தலினை திட்டமிட்டு செயற்படுத்தும்போது கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும்

aat SRI LANKA

***7.* சான்றுகளைப் பெற்றுக் கொள்ளல்**

முடிவுக்கு வருவதற்கான அடிப்படையாக போதுமானதும் பொருத்தமானதுமான சான்றுகளை பயிற்சியாளர் பெற்றுக் கொள்ள வேண்டும்

***8.* ஆவணப்படுத்தல்**

SLAuS இணங்க பணிக்கமர்த்தல் இடம்பெற்றமை மற்றும் பணிக்கமர்த்தல் அறிக்கை வழங்குவதற்குரான சான்றுகளில் முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களை ஆவணப்படுத்தல் வேண்டும்

***9.* உறுதிப்பாட்டு அறிக்கையினை தயாரித்தல்**

- உறுதிப்பாடு அறிக்கையில் காணப்படும் முடிவுக்கு சான்றாக போதுமானதும், பொருத்தமானதுமான ஆதாரங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டதா என்பதனை பயிற்சியாளர் கவனத்தில் கொள்ளல் வேண்டும்
- உறுதிப்பாடு அறிக்கை கட்டாயமாக எழுத்துமூலமாக இருப்பதோடு விடயப் பொருள் தொடர்பாக தெளிவாக பயிற்சியாளரின் முடிவினை வெளிப்படுத்துவதுமாகவும் இருத்தல்

***(05 புள்ளிகள்)***

## *வினா 04 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

***அத்தியாயம் 09 – நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான தேவைப்பாடுகள்***

***பின்வருவனவற்றில் ஏதேனும் இரண்டினை விளக்கியிருப்பின் முழு மதிப்பெண்கள் வழங்க அனுமதிக்கப்படும்.***

- **நிறுவனத்திற்குள் காணப்படும் தரத்திற்கான தலைமைத்துவ பொறுப்புணர்ச்சிகள்**

பணிக்கமர்த்தல்களினை மேற்கொள்ளும் போது தரத்தினை கட்டாயமாக இனங்காணக்கூடிய உள்ளக கலாச்சாரத்தினை மேம்படுத்தக்கூடிய விதத்தில் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை நிறுவனம் அமுல்படுத்த வேண்டும்.

ஒவ்வொரு கணக்காய்வு பணிக்கமர்த்தலின் ஒட்டுமொத்த தரத்தின் பொறுப்பினை எடுக்கும் போது பணிக்கமர்த்தலின் பங்காளரின் செயல்பாடுகள் மற்றும் பணிக்கமர்த்தல் குழு அங்கத்தவர்கள் மற்றய அங்கத்தவர்களோடு தொடர்புபடும் விதம் என்பன மிக முக்கியமாகும்

- **பொருத்தமான ஒழுக்க தேவைப்பாடுகள்**

நியாயமான உறுதிப்பாட்டினை அடைந்து கொள்ளும் விதமாக நிறுவனம் தனது கொள்கைகள் மற்றும் செயல்பாடுகளை வடிவமைத்துக் கொள்ள வேண்டும் அத்தோடு அந் நிறுவனத்தின் அங்கத்தவர்களும் நிறுவனவும் அதோடு இணங்கி செயல்படுதல் வேண்டும். இக் கொள்கைகள் மற்றும் செயல்பாடுகள் நேர்மை, குறிக்கோள்தன்மை, தொழில்சார் நிபுணத்துவம், நம்பிக்கைத்தன்மை, தொழில்சார் நடத்தை போன்றவற்றை உள்ளடக்கி இருக்க வேண்டும்

- **குறித்த பணிக்கமர்த்தல்கள் மற்றும் வாடிக்கையாளர் உறவினை ஏற்றுக்கொள்ளலும் தொடர்ந்து செல்லலும்**

நிறுவனம் நியாயமான உறுதிப்பாட்டினை வழங்கும் வகையில் கொள்கைகள் மற்றும் செயல்பாடுகள் காணப்படல் வேண்டும், நிறுவனம் பின்வரும் விடயங்கள் காணப்படும் பணிக்கமர்தல்களையே எடுத்துக் கொள்ளல் வேண்டும்

***a)*** நிறுவனம் குறித்த பணிக்கமர்த்தலினை மேற்கொள்வதற்கு நிபுணத்துவமாக இருப்பதுடன் பணிக்கமர்த்தலுக்கு தேவையான நேரம் மற்றும் வளங்களை கொண்டு இருத்தல் வேண்டும்

***b)*** உரிய ஒழுக்க தேவைப்பாடுகளோடு நிறுவனம் இணங்கி இருத்தல் வேண்டும்

***c)*** வாடிக்கையாளரின் நேர்மையினை கவனத்தில் கொள்ளும்போது, வாடிக்கையாளர் நேர்மை குறைவாக இருக்கின்றது என்பதற்கான தகவல்கள் இல்லாமல் இருத்தல்

- **மனித வளங்கள்**

ஒவ்வொரு பணிக்கமர்த்தலுக்கும் பொறுப்புக்களை பங்காளர்களுக்கு ஒப்படைப்பதுடன் மனித வள முகாமைத்துவத்திற்கு கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை அமுல்படுத்துதல்

- **பணிக்கமர்த்தல் செயல்பாடு**

இப் பகுதிக்கான கொள்கைகள் மற்றும் செயன்முறைகள் பின்வரும் விடயங்களை உள்ளடக்கி இருத்தல் வேண்டும்

***a)*** தொழில்சார் நியமத்தின் அறிமுகம், சட்டரீதியான ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளின் பிரயோகம் போன்றவற்றின் ஊடாக பணிக்கமர்த்தல் செயல்பாட்டின் தரத்தில் மாறாமைத் தன்மையினை மேம்படுத்தக்கூடிய பொருத்தமான விடயங்களை உள்ளடக்கி இருத்தல் வேண்டும்

***b)*** பொறுப்புணர்ச்சிகளை மேற்பார்வை செய்தல்

***c)*** பொறுப்புணர்ச்சிகளை மீள்பார்வை செய்தல்

- **கண்காணித்தல்**

நியாயமான உறுதிப்படுத்தலை பெற்றுக் கொள்ள ஒரு கண்காணித்தல் செயல்முறையினை வடிவமைத்துக் கொள்ள வேண்டும். இதன் மூலம் தரக் கட்டுப்பாட்டோடு முறைமையோடு தொடர்புடைய கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் போதுமானதாகவும் பயனுறுதியாக செயற்படுவதுமாக இருத்தல் வேண்டும்

***(05 புள்ளிகள்)***

***பகுதி A முடிவு***

(மொத்தம் 30 புள்ளிகள்) **பகுதி - B**

## *வினா 05 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

***அத்தியாயம் 05 - இடர் மதிப்பீடு மற்றும் கணக்காய்வு செயல்முறை***

**(a)**

மொத்தச் சொத்துக்களில் 74% யினை இருப்புக்கள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன மற்றும் இன்ரெல் நிறுவனத்தின் தேறிய சொத்துக்களில் 91% இருப்புக்கள் ஆகும். இதனடிப்படையில் இருப்புக்கள் பொருண்மையானதும் பரவலானதுமாக கருத்தில் கொள்ளப்படுகிறது

இருப்புக்களானது கிரயம் அல்லது தேறிய தேறத்தக்க பெறுமதியில் குறைந்தது என்ற அடிப்படையில் பெறுமதியிடப்பட்டுள்ளது என்பதனை முகாமைத்துவம் குறிப்பிடவில்லை, இதன் காரணமாக இருப்பின் பெறுமதியானது கூட்டி மதிப்பிடப்பட்டிருக்கலாம் இவை LKAS 02 இற்கு மாற்றமாக அமையும்.

இருப்புக்களின் இருத்தலினை உறுதிப்படுத்திக் கொள்வது பௌதீக இருப்பு சரிபார்ப்பின் மூலமாகும். கிரயம் அல்லது தேறிய தேறத்தக்க பெறுமதியில் குறைந்த பெறுமதியில் இருப்பு மதிப்பிடப்பட்டுள்ளது என்பதனை முகாமைத்துவம் ஏற்றுக்கொள்ளப்படாத வரை கணக்காய்வாளர்கள் தகுதியுடனான அபிப்பிராயத்தினை வழங்குவதற்கு ஆலோசனை செய்யப்படுகிறார்கள்.

பௌதீக இருப்பு சரிபார்ப்பிற்கு 31.03.2023 இல் கணக்காய்வாளர் அழைக்கப்படாததினால் இருப்புக்களின் இருத்தல் தொடர்பில் மாற்று செயல்முறைகள் மூலம் கணக்காய்வு சான்றுகளை பெற்றுக் கொள்ள முடியுமா என்பதனை மதிப்பிட வேண்டும். அவ்வாறு இல்லாவிடின் தகுதியுடைய அபிப்பிராயத்திற்கு இட்டுச் செல்லும்.

தனித்தனியாகவோ அல்லது கூட்டாகவோ பிழைகள் பொருண்மையாக காணப்பட்டு ஆனால் நிதிக் கூற்றுக்களில் பரவலாக இல்லாமல் இருக்கிறது என கணக்காய்வாளர் முடிவுக்கு வரும் போது, அத்தோடு அம் முடிவுக்கு வருவதற்கு போதுமானதும், பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகள் பெற்றுக் கொள்ளப்பட்டதாயின் தகுதியுடைய அபிப்பிராயத்திற்கு இட்டுச் செல்லும்.

***(03 புள்ளிகள்)***

**(b)** கணக்காய்வளரின் அபிப்பிராயத்தினை வடிவமைக்கும் போது பின்வரும் விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும்

***பின்வருவனவற்றில் ஏதேனும் நான்கினை குறிப்பிட்டிருப்பின் முழு மதிப்பெண்கள் வழங்க அனுமதிக்கப்படும்.***

1 போதுமானதும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகள் பெற்றுக் கொள்ளப்பட்டதா என்பதனை உறுதிப்படுத்தல்

2 அடையாளம் காணப்பட்ட திருத்தப்படாத பிழைகள் நிதிக்கூற்றுக்களில் தனித்தனியாகவோ அல்லது கூட்டாகவோ பொருண்மையானதாக காணப்படுகின்றதா என்பதனை உறுதிப்படுத்தல்

aat SRI LANKA

3 தெரிவு செய்யப்பட்டு, பிரயோகிக்கப்பட்டுள்ள பொருத்தமான முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் நிதிக் கூற்றுக்களில் பொருத்தமாக வெளிப்பட்டுத்தப்பட்டுள்ளன என்பதனை உறுதிப்படுத்தல்

4 தெரிவு செய்யப்பட்டு, பிரயோகிக்கப்பட்டுள்ள கணக்கீட்டு கொள்கைகள் பிரயோகிக்கக் கூடிய நிதி அறிக்கைப்படுத்தல் சட்டகத்தினடிப்படையில் ஒன்றித்ததாக இருக்கின்றதா என்பதனை உறுதிப்படுத்தல்

5 முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள கணக்கீட்டு மதிப்பீடுகள் நியாயமானாதாக உள்ளதா என்பதனை உறுதிப்படுத்தல்

6 நிதிக் கூற்றுக்களில் முன்வைக்கப்பட்டுள்ள தகவல்கள் பொருத்தமானதாகவும், ஒப்பிடக் கூடியதாகவும் மற்றும் புரிந்து கொள்ளக் கூடியதாகவும் இருக்கிறதா என்பதை உறுதிப்படுத்தல்

7 உரிய பயனாளர்களுக்கு பொருண்மையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளின் தாக்கங்கள் தொடர்பாக போதுமான அளவு வெளிப்படுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதை உறுதிப்படுத்தல்

8 ஒவ்வொரு நிதிக் கூற்றுக்களின் தலைப்பு உள்ளடங்களாக நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ள சொற்கள் பொருத்தமானதாக உள்ளதா என்பதை உறுதிப்படுத்தல்

***(04 புள்ளிகள்)***

***(மொத்தம் 10 புள்ளிகள்)***

## *வினா 06 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

***அத்தியாயம் 08 – நெறிமுறை தேவைப்பாடுகள்***

**(a)**

1 **Good Bank PLC** யினை வாடிக்கையாளராக ஏற்றுக் கொள்ள முன்னர், **R & F** நிறுவனமானது இவ் ஏற்றுக் கொள்ளலினால் அடிப்படை தத்துவங்களுக்கு ஏதாவது அச்சுறுத்தல்கள் உருவாக்கப்படுமா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்

2 இக் கம்பனியானது கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கு எந்தவொரு வலுக்குறை ஏற்பாட்டையும் மேற்கொள்ளவில்லை என்பதனை அடையாளம் காண முடியும்

3 **R & F** நிறுவனம் இவ் விடயத்தின் முக்கியத்துவத் தன்மையினை மதிப்பீடு செய்வதோடு பொருத்தமான பாதுகாப்பு நடைமுறைகளை மேற்கொண்டு இடரினை ஏற்றுக் கொள்ளக் கூடிய மட்டத்திற்கு குறைத்தல் வேண்டும்

4 வலுக்குறைப்புக்கள் மற்றும் நிதி சொத்துக்கள் தொடர்பில் நிறுவனமானது நிபுணர்களை பயன்படுத்துவதன் மூலம் இடரினை குறைத்து வாடிக்கையாளரினை ஏற்றுக் கொள்ள முடியும்

5 பொருத்தமான அனுபவமுள்ள ஊழியர்களை போதுமான அளவு ஒப்படைத்தல்

6 பொருத்தமான அறிக்கைப்படுத்தல் தேவைப்பாடுகளுடனுடன் அனுபவத்தினை வைத்திருத்தல்

இவற்றை உறுதிப்படுத்திய பின்னர் **Good Bank PLC** யினை புதிய வாடிக்கையாளராக நிறுவனம் ஏற்றுக் கொள்ள முடியும்.

எவ்வாறாயினும், அச்சுறுத்தல்களை ஏற்றுக் கொள்ளப்படும் அளவு குறைத்துக் கொள்ள சாத்தியமில்லையாயின், வாடிக்கையாளருடன் உறவு முறையை ஏற்படுத்த கணக்காய்வாளர் மறுத்தல் வேண்டும்

***(05 புள்ளிகள்)***

**(b)**

- **Centra PLC** ஒரு பொதுக் கம்பனியாகும் எனவே கணக்காய்வு பணிக்கமர்த்தல்கள் பொதுமக்களின் ஆர்வத்தில் உள்ளடங்கும். ஒழுக்க கோவைக்கு அமைய **Centra PLC** யின் பணிக்கமர்த்தலின் பங்காளர், குழு மற்றும் நிறுவனம் என்பன சுயாதீனமானதாக இருத்தல் வேண்டும்.

- சுயாதீனத்தன்மை என்பது மனதளவில் சுயாதீனம் மற்றும் தோற்றத்தில் சுயாதீனம் என்பவற்றை உள்ளடக்கி காணப்படும்.
  - மனதளவில் சுயாதீனம் - தொழில்சார் தீர்ப்பினை சமரசம் செய்துகொள்ளும் விதத்தில் செல்வாக்குகளில் பாதிப்படையாமல் முடிவினை வெளிப்படுத்தும் மனநிலை ஆகும். ஒரு தனிநபராக நேர்மை, குறிக்கோள்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாட்டோடு செயற்படுதல் வேண்டும்
  - தோற்றத்தில் சுயாதீனம் - கொடுக்கப்படுகின்ற எல்லாத் தகவல்களையும் சந்தர்ப்பங்களையும் மதிப்பீடு செய்து தகவலளிக்கப்படும் மூன்றாம் நபர் ஒருவர் பங்காளரது நேர்மை, குறிக்கோள்தன்மை அல்லது தொழில்சார் ஐயப்பாடு தொடர்பாக மதிப்பீடுகளை செய்ய முடியும் என்பதால் முக்கியமான உண்மைகள் மற்றும் சந்தர்ப்பங்களை தவிர்க்கக்கூடாது

aat SRI LANKA

- சுயாதீனத்தன்மைக்கு அச்சுறுத்தல் வழங்கக்கூடிய சில சந்தர்ப்பங்களும் உறவுமுறைகளும் இனங்காணப்பட முடியும் அதாவது நிதிரீதியான ஆர்வம், கடன்கள், உத்தரவாதங்கள், வணிக உறவுகள் மற்றும் தனிப்பட்ட உறவுமுறைகள்

- இவ் வினாவில், ஒரு நெருங்கிய தொடர்பினை நாம் அடையாளம் காணமுடிவதோடு உறுதிப்பாட்டு வாடிக்கையாளரோடு சிரேஷ்ட நபரொருவர் நீண்டகால தொடர்பினை கொண்டிருப்பதனை காண முடியும். பொதுவெளியில் பங்காளர் வாடிக்கையாளரோடு மிக அதிகமான இணைந்து காணப்படுவது அவரது சுயாதீனத்தன்மையை கேள்விக்கு உட்படுத்தும் இதற்கான காரனம் தோற்றத்தில் சுயாதீனம் என்பது நிலைநிறுத்தப்படவில்லை

***(05 புள்ளிகள்)***
***(மொத்தம் 10 புள்ளிகள்)***

## *வினா 07 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

| *அத்தியாயம் 03 – வணிக செயல்முறைகள்* |
|---|

**(a)**

**பின்வருவனவற்றில் ஏதேனும் நான்கினை குறிப்பிட்டிருப்பின் முழு மதிப்பெண்கள் வழங்க அனுமதிக்கப்படும்.**

1. **டிஸ்னா டீ கடை**

   வழமையான கடன் காலம் 30 நாட்கள் ஆகும் ஆனால் 60 நாட்களுக்கு மேலதிகமாக பணம் செலுத்தப்படவில்லை. மேலும் GRN யும் தரப்படாததினால், உறுதிப்படுத்தலின் மூலம் உறுதிப்படுத்திக் கொள்வது அவசியமாகும்

2. **ரிஸான் இறைச்சிக் கடை**

   GRN 4766 யின் பெறுமதி ரூபா.105,460 ஆகும். எவ்வாறாயினும், கடன்கொடுத்தோர் பட்டியல் ரூபா. 142,230 யினை காட்டுகின்றது ஆகவே சரியான பெறுமதியினை பெறுவது அவசியமாகும்.

3. **விஜயா விநியோகஸ்தர்கள்**

   GRN 4770 யின் பெறுமதி 47,900 ஆகும் ஆனால் கடன் கொடுத்தோர் பட்டியலில் காட்டப்படவில்லை. இது ஏற்கனவே செலுத்தப்பட்டதாலா? வெளியக உறுதிப்படுத்தலினை பெற்றுக் கொள்வது அவசியமாகும்.

4. **புதிய மரக்கறிகள் விற்பனை நிலையம்**

   கடன் கால 30 நாட்களாக இருப்பினும், 30 நாட்கள் கடந்த போதும் இன்னும் செலுத்தப்படவில்லை

***(04 புள்ளிகள்)***

**(b)**

***பின்வருவனவற்றில் ஏதேனும் இரண்டினை குறிப்பிட்டிருப்பின் முழு மதிப்பெண்கள் வழங்க அனுமதிக்கப்படும்.***

- வியாபார கடன்கொடுத்தோர்களது பட்டியல்களை பரீட்சித்தல்
- வியாபார கடன்கொடுத்தோர்களிடம் இருந்து பெற்ற பெறுவனவுகளை பரீட்சித்தல்
- பட்டியல்களோடு GRN யினை பரீட்சித்தல்
- எதிர்வரும் கொடுப்பனவுகளை பரீட்சித்தல்
- துண்டிப்பு செயல்முறைகள

***(03 புள்ளிகள்)***

aat SRI LANKA

**(c)**
நிதி அறிக்கைப்படுத்தல் சட்டகம் வழமையாக இரண்டு வகையான நிகழ்வுகளை அடையாளப்படுத்துகிறது

1. நிதி நிலமைக் கூற்றுத் திகதியில் நிலமைகளுக்கான ஆதாரங்களை வழங்கக்கூடிய நிகழ்வுகள்
2. நிதி நிலமைக் கூற்றுத் திகதிக்கு பிறகு நிகழ்வுகள் எழுந்தமைக்கான நிலமைக்கான ஆதாரங்களை வழங்குவது

நிதிக் கூற்றுக்களின் திகதிக்கும் கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கும் இடையிலான நிகழ்வுகளுக்கான போதுமானதும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக் கொள்ளும் விதமாகவும் திருத்தம், வெளிப்படுத்தல் தேவைப்பாடுகளை அடையாளம் காணும் விதத்தில கணக்காய்வாளர் தனது கணக்காய்வு செயல்முறைகளை வடிவமைத்துக் கொள்ள வேண்டும்.

***(03 புள்ளிகள்)***

***(மொத்தம் 10 புள்ளிகள்)***

aat SRI LANKA

| பகுதி B முடிவு |
|---|

## வினா 08 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

***அத்தியாயம் 03 – உள்ளக கட்டுப்பாட்டு முறைமை மற்றும் வணிக செயல்முறைகள்***

**(a)**

***பின்வருவனவற்றில் ஏதேனும் இரண்டினை விளக்கியிருப்பின் முழு மதிப்பெண்கள் வழங்க அனுமதிக்கப்படும்.***

**1.** ஒப்புதல் செய்யப்பட்ட வடிவமைப்புக்கு உப ஒப்பந்தக்காரர்கள் 2 மாதிரிகளை தாயாரிக்க வேண்டும் ஆனால் மாதிரியினை **D Fashion Ltd** ஒப்புதல் செய்ய வேண்டும். எந்தவொரு ஒப்புதலும் வாடிக்கையாளரினால் வழங்கப்படுவதில்லை.
வடிவமைப்பு குறைபாடு அல்லது தரத்தின் குறைபாடு காரணமாக வாடிக்கையாளர்களினால் கட்டளைகள் மறுக்கப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன

**2.** நீண்டகாலமாக பணம் தர இருக்கும் வாடிக்கையாளரிடம் இருந்து கடனினை அறவிட்டுக் கொள்ள **D Fashion Ltd** எந்தவொரு முறையான பொறிமுறையும் கொண்டிருக்கவில்லை

**3.** உப ஒப்பந்தக்காரர்கள் எந்தவொரு கடன் காலத்தினையும் **D Fashion Ltd** க்கு வழங்கவில்லை ஆனால் **D Fashion Ltd** ஒரு மாத கால கடன் காலத்தினை வாடிக்கையாளர்களுக்கு வழங்குகிறது. இவ் விடயம் **D Fashion Ltd** க்கு திரவத்தன்மை பிரச்சினைகளை உருவாக்கும்.

**4.** கட்டளைப் பெறுமதி 01 மில்லியனை விட அதிகமாக காணப்பட்டால் உப ஒப்பந்தக்காரர்கள் முற்பணத்தினை எதிர்பார்க்கின்றனர் ஆனால் **D Fashion Ltd** வாடிக்கையாளரிடம் இருந்து எந்தவொரு முற்பணத்தையும் பெறாமல் கட்டளைகளை ஏற்றுக் கொள்கின்றனர்

**5.** உப ஒப்பந்தக்காரர்கள் கடன் காலத்தினை வழங்காவிடினும், **D Fashion Ltd.** யின் கணக்குகளில் இரண்டு உப ஒப்பந்தக்காரர்களின் மீதிகள் காணப்படுகின்றன

**6.** ரூபா.15 மில்லியனுக்கு மேற்பற்பட்ட்ட இருப்புக்கள் களஞ்சியத்தில் காணப்படுகின்றன இவை வாடிக்கையாளர்களால் எடுத்துச் செல்லப்படவில்லை

**7.** GRN ஒப்புதல் செய்யப்படும் போது கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகிறது. கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது GRN பட்டியல்களோடு அல்லது ஏனைய துணை ஆவணங்களோடு இணைத்துப் பார்க்கப்படவில்லை

***(06 புள்ளிகள்)***

aat SRI LANKA

**(b)**

***அத்தியாயம் 03 - உள்ளக கட்டுப்பாட்டு முறைமை மற்றும் வணிக செயல்முறைகள்***

***பின்வருவனவற்றில் ஏதேனும் மூன்றினை விளக்கியிருப்பின் முழு மதிப்பெண்கள் வழங்க அனுமதிக்கப்படும்.***

1. கடமைகளை பிரித்தல் - கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல், கொடுக்கல் வாங்கல்களை அதிகாரம் அளித்தல் மற்றும் சொத்துக்களின் காவலினை வெவ்வேறு ஊழியர்கள் பராமரித்தல் போன்ற பொறுப்புனர்ச்சிகளை வெவ்வேறு ஊழியர்களுக்கு ஒப்படைப்பதன் மூலம் மோசடி மற்றும் பிழைகளுக்கான இடரினை இழிவுபடுத்திக் கொள்ள முடியும்.
    - கொடுப்பனவு கைச்சாத்து கணக்கு பதிவாளரினால் தயாரிக்கப்பட்டு அவை கணக்காளரினால் ஒப்புதல் செய்யப்படல் வேண்டும்
    - வழங்குனருக்கு கொடுப்பனவு செய்யும் செயல்முறையின் போது பட்டியலினை அதிகாரமளிக்க, பேரேடுகளில் பதிவு செய்ய, கொடுப்பனவுகளை மேற்கொள்ள பல்வேறு ஊழியர்கள் காணப்படுவார்கள்.
2. பௌதீக கட்டுப்பாடுகள் - அதிகாரமளிக்கப்படாத அனுகலை தடுப்பதற்கு உயிர் அணிக் கட்டுப்பாடுகள் வணிகத்தின் குறித்த பகுதியில் பயன்படுத்தப்படலாம்
3. அதிகாரமளித்தல் மற்றும் அனுமதித்தல்: செயல்பாடுகள் செயல்முறைப்படுத்த முன்னர் அவற்றிற்கு அனுமதி வழங்கல்
    - அனைத்து கடன் விற்பனைகளும் கணக்காளரினால் அனைத்து உயர் முகாமைத்துவத்தினால் ஒப்புதல் செய்யப்படல் வேண்டும்
    - வழங்குனர்களுக்கு அனுப்ப முன்னர், கொள்வனவு நிறைவேற்றுனரால் தயாரிக்கப்பட்ட கொள்வனவு கட்டளைகள் கொள்வனவு முகாமையாளரினால் ஒப்புதல் செய்யப்படல் வேண்டும்
4. முகாமைத்துவ கட்டுப்பாடுகள் - முகாமைத்துவ செயல்பாடு மீள்பார்வை
    - பெறுவனவு மற்றும் கொடுப்பனவு பொறிமுறைகளை முகாமைத்துவம் கட்டாயமாக மீள்பார்வை செய்தல் வேண்டும் அத்தோடு கட்டாயமாக வழமைக்கு மாறான முரன்களை அடையாளம் காணல் வேண்டும்
    - முகாமையாளர்கள் பாதீட்டையும், உண்மையினையும் ஒப்பிட்டு வழமைக்கு மாற்றமான வேறுபாடுகளை அடையாளம் காண்பர்
5. கண்காணிப்பு கட்டுப்பாடுகள் - ஊழியர்களினால் மேற்கொள்ளப்பட்ட செயல்பாடுகளின் கண்காணிப்பு / அவதானிப்பு
    - கண்கானிப்பாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட கடமைகளை **D Fashion Ltd** யின் முகாமைத்துவத்தினால் கண்கானிக்கப்படல் வேண்டும்
6. அமைப்புரீதியான கட்டுப்பாடுகள் - நிறுவனக் கட்டமைப்புக்களினால் வழங்கப்படும் கட்டுப்பாடுகள் அதாவது அறிக்கைப்படுத்தல் பாதை, அதிகாரப் பாதை, நிறுவனத்தின்

aat SRI LANKA

ஒவ்வொரு பதவியில் இருப்பவர்களின் அதிகாரம் மற்றும் பொறுப்புணர்ச்சி

- மையப்படுத்தப்பட்ட அல்லது ஒடுங்கிய நிறுவனக் கட்டமைப்பினை கொண்டிருத்தல்

7. கணிதரீதியான மற்றும் கணக்கீட்டு கட்டுப்பாடுகள் - கொடுக்கல் வாங்கல்களின் பதிவு மற்றும் செயல்முறப்படுத்தலின் துல்லியத்தன்மை மற்றும் சரியானதன்மையினை பரீட்சித்தல்
   - நிதி அங்ககத்தவர் ஒருவரினால் மாதாந்த இணக்கக்கூற்று தயாரிக்கப்படல்
8. ஆள்சார் கட்டுப்பாடுகள் - தனிநபர்களின் தெரிவு, தகுதிகள் மற்றும் பயிற்சி, ஆள்சார் தரங்கள் போன்றவற்றில் கவனம் செலுத்தப்படல் வேண்டும். செயல்முறையில் பங்கேற்கும் மக்களின் நேர்மை, நிபுணத்துவம் போன்றவற்றிலே முறைமையின் தரம் தங்கி இருக்கும்
   - உற்பத்தி பகுதிகளில் திறனுள்ள, தகுதிவாய்ந்த ஊழியர்களே காணப்படுகின்றனர் என்பதை உறுதிப்படுத்தல்

***(06 புள்ளிகள்)***

**(c)**

***அத்தியாயம் 03 - உள்ளக கட்டுப்பாட்டு முறைமை மற்றும் வணிக செயல்முறைகள்***

***பின்வருவனவற்றில் ஏதேனும் இரண்டினை விளக்கியிருப்பின் முழு மதிப்பெண்கள் வழங்க அனுமதிக்கப்படும்.***

**தடுக்கக்கூடிய கட்டுப்பாடுகள்:**

1. பொருத்தமற்ற ஆடைகளுக்கான (வடிவமைப்பு மற்றும் மாதிரியோடு ஒத்துப் போகாதவை) கொடுப்பனவுகள் உபஒப்பந்தக்காரர்களுக்கு தடுத்தல். GRN யினை தயாரிக்கும் போது ஆடைகளை சரிபார்த்தல் மேற்கொள்ளப்படுமாயின் இதனை அடைந்து கொள்ளலாம். GRN யினை தயாரிப்பவர் கட்டாயமாக மாதிரி அடிப்படையில் ஆடைகளை பரீட்சிக்க வேண்டும் இதன் மூல இருப்பானது அனுமதிக்கப்பட்ட வடிவம் மற்றும் மாதிரியோடு காணப்படுகிறது என்பதை உறுதிப்படுத்தலாம்.
2. பொருத்தமற்ற ஆடைகளை உப ஒப்பந்தக்காரர்கள் உற்பத்தி செய்வதனை தடுத்தல்: உற்பத்தியினை எழுமாறாக கண்காணித்து உற்பத்தி செயன்முறையானது வடிவம் மற்றும் மாதிரிக்கமைய காணப்படுகின்றதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளல்
3. வாடிக்கையாளர்களினால் கம்பனியின் கடன் கொள்கை மீறப்படுவதை தடுத்தல்: வாடிக்கையாளர்களின் வழமையான சந்திப்புக்கள் மூலம் அவர்களை தொடர்தல் மற்றும் செலுத்தவுள்ள தொகை தொடர்பான நினைவூட்டங்களை அனுப்புவதன் மூலம் இதனை அடைந்து கொள்ள முடியும்.
4. வடிவமைப்பு குறிப்புக்களை அனுமதித்ததன் பின்னர் வாடிக்கையாளர்களிடமிருந்து முற்பணத் தொகையொன்றினை வேண்டுதல்
5. வர்த்தகரீதியான உற்பத்தியை ஆரம்பிக்க முன்னர் வடிவமைப்பானது **D Fashion Ltd** யினாலும் வாடிக்கையாளரினாலும் கட்டாயமாக அனுமதிக்கப்படல் வேண்டும்

***(04 புள்ளிகள்)***

***(d)***

***அத்தியாயம் 03 - உள்ளக கட்டுப்பாட்டு அமைப்பு மற்றும் வணிக செயல்முறைகள்***

1. **காசு முகாமைத்துவ செயல்முறை**

காசு தொடர்பான சாத்தியமான மோசடி மற்றும் களவு என்பன அதிக இடர் உள்ள பகுதிகளாக காணப்படுவதால் காசு முகாமைத்துவம் அதிக இடர் உள்ள பகுதியாக காணப்படுகிறது.

ஆகவே, ஒவ்வொரு வணிக நிறுவனமும் கட்டாயமாக அவசியமான நடவடிக்கைகளை கையிலுள்ள காசு, காசுப் பெறுவனவுகளின் முழுமைத்தன்மை, உண்மையான கொடுக்கல் வாங்கல்களுக்கு மாத்திரம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படல் போன்ற பிரிவுகளில் எடுப்பதன் மூலம் போதுமான அளவு பாதுகாப்பு நடைமுறைகள் உள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்

- கொடுப்பனவுகளை ஒப்புதல் செய்தல்
- ஏற்றுக்கொள்ளப்பட்ட சிறப்புக்குறிப்புகளுக்கு ஏற்ப கட்டளைகள் முடிக்கப்படல்

2. **இருப்பு முகாமைத்துவ செயல்முறை**

வியாபார வணிகங்கள் மற்றும் உற்பத்தி வணிகங்கள் சாதாரணமாக பாரியளவு எண்ணிக்கையினை இருப்பாக கொண்டிருக்கும். இவ் வணிகங்கள் பாரியளவு கவனித்தக்க முதலீட்டினை இருப்பில் முதலீடு செய்துள்ளனர். தொழிற்படு மூலதனத்தினை பயனுறுதியாக பயன்படுத்த வேண்டுமானால், இருப்பு பராமரித்தல் செலவுகள் முறையாக முகாமைத்துவம் செய்யப்படல் வேண்டும்.

இருப்புக்களின் வகைகள்,

aat SRI LANKA

இறுதியில் காணப்படும் ஆடைகள் வடிவம் மற்றும் மாதிரிகளோடு ஒத்துப்போகின்றதா என்பதனை உறுதிப்படுத்துவதற்காக உப ஒப்பந்தக்காரர்களின் உற்பத்தி செயன்முறையின் கண்காணிப்பு அவசியமாகும். ஏற்கனவே இருப்புக்களுக்கு நிறுவனம் செலவு செய்துள்ளதால் GRN தயாரிக்கப்பட்டு முடிவடைந்ததும் உடனடியாக வாடிக்கையாளர்களுக்கு இருப்புக்கள் விடுவிக்கப்படல் வேண்டும்.

***(05 புள்ளிகள்)***

**(e)**

| பயன்பாட்டு கட்டுப்பாடு | உதாரணம் |
|---|---|
| உள்ளீட்டு துல்லியத்தின் மீதான கட்டுப்பாடுகள் | ▪ உள்ளீட்டு கொடுக்கல் வாங்கலின் தரவு புலங்களை பரீட்சிப்பதற்கான முறைமைகள் (GRN தொடரிலக்கங்கள், திகதி)<br>▪ டிஜிட்டல் சரிபார்ப்பு<br>  ▪ இருப்பு சோதனை<br>  ▪ தேவையான தகவல்<br>  ▪ அனுமதிக்கப்பட்ட எல்லை<br>▪ எழுத்து சோதனை<br>▪ வெளியீட்டினை கைமுறை ஆய்வுக்கு உட்படுத்தல் மற்றும் மூலத்துடன் இணக்கம் செய்தல் |
| உள்ளீடு முழுமையின் மீதான கட்டுப்பாடுகள் | ▪ கட்டுப்பாட்டு மொத்தங்களின் கைமுறை மற்றும் முறைமைப்படுத்தப்பட்டவைகளின் உடன்பாடு<br>▪ ஒன்றுக்கொன்றான ஆவணக் கணிப்பு<br>▪ அதிகாரமளிக்கப்பட்ட நபர்களின் மூலமான உள்ளீடு |
| உள்ளீட்டு அதிகாரம் மீதான கட்டுப்பாடுகள் | ▪ தகவல் உள்ளீடு அங்கீகரிக்கப்பட்டதா என்பதை உறுதிப்படுத்த கைமுறை சோதனைகள்<br>▪ அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்களின் உள்ளீடு |
| செயலாக்கத்தின் மீதான கட்டுப்பாடுகள் | ▪ உள்ளீடு பூரணப்படுத்தப்பட்டவுடன் உள்ளீடு மீதான கட்டுப்பாடுகள் இருக்க வேண்டும். (உ-ம்) தொகுதி இணக்க செயற்பாடுகள்)<br>▪ செயலாக்கம் முடிவதற்குள் மக்கள் வெளியேறுவதைத் தடுக்கும்படியான திரை எச்சரிக்கைகள் |
| முதன்மை கோப்புகள் மற்றும் நிலையான தரவு மீதான கட்டுப்பாடுகள் | ▪ ஒன்றுக்கு ஒன்று சரிபார்த்தல்<br>▪ அனைத்து முதன்மை கோப்புகள் மற்றும் நிலையான தரவுகளின் சுழற்சி மதிப்புரைகள்<br>▪ பதிவு எண்ணிக்கைகள் (செயல்படுத்தப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை) மற்றும் எண்ணிக்கைகளின் மொத்தம் (உதாரணமாக, அனைத்து ஊதிய எண்களின் மொத்தம்) முதன்மை கோப்புகள் பயன்படுத்தப்படும் போது, நீக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்ய பயன்படுத்தப்படும்<br>▪ தற்போதைய இருப்பு இல்லாத கணக்குகளை நீக்குவதைக் கட்டுப்படுத்துகிறது |

***(06 புள்ளிகள்)***

***(மொத்தம் 25 புள்ளிகள்)***

aat SRI LANKA

## *வினா 09 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

| *அத்தியாயம் 05 - இடர் மதிப்பீடு மற்றும் கணக்காய்வு செயல்முறை* |
|---|

**(a)**

***பின்வருவனவற்றில் ஏதேனும் இரண்டினை இனங்கண்டிருப்பின் முழு மதிப்பெண்கள் வழங்கப்படும்.***

1. CBSL போன்ற பொருத்தமான ஒழுங்கமைப்புக்களிடம் இருந்து அடகு பிடித்தல் நடவடிக்கைக்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளதா என்பதனை உறுதிப்படுத்தல்
2. CBSL யின் வழிகாட்டலுக்கு இணங்க ஆகக் குறைந்த மூலதனம் பராமரிக்கப்பட்டுள்ளதா? மற்றும் போதுமான மூலதன விகிதம் கணிக்கப்பட்டுள்ளதா என்பதனை உறுதிப்படுத்தல்
3. இறுதிக் கணக்குகளில் ஆண்டிறுதி நாட்குறிப்பு பதிவுகள் முறையாக சீராக்கப்பட்டுள்ளதா? என்பதனை உறுதிப்படுத்தல்
4. வலுக்குறைப்பு ஏற்பாடுகள் முறையாக கணிக்கப்பட்டுள்ளதா என்பதனையும் வலுக்குறைப்பு ஏற்பாட்டோடு தொடர்புடைய அனைத்து தேவைப்பாடுகளும் உரிய நியமத்தோடு இணங்கிச் செல்கின்றதா என்பதை உறுதிப்படுத்தல்
5. **YF PLC.** யின் தொடர்ந்தியங்கும் தன்மையின் செல்லுபடியாகும் தன்மையினை மீள்பார்வை செய்தல், எந்தவொரு மீள் பதிலீடும் இன்றி சில சிரேஷ்ட முகாமையாளர்கள் **YF PLC.** யில் இருந்து பதவி விலகி உள்ளனர்
6. **YF PLC** யானது ஒரு நிதிக் கம்பனியாக இருப்பினும் நிதிக் கம்பனி அல்லாத கம்பனியின் 25% பங்குகளில் முதலீடு செய்துள்ளது. இவ் விடயம் தொடர்பில் **CBSL** யின் வழிகாட்டல்கள் மற்றும் ஏனைய தேவைப்பாடுகள் மீறப்பட்டுள்ளதா என்பதனை உறுதிப்படுத்தி சரிபார்த்தல் வேண்டும்.
7. CEO யின் மிகை ஊதியக் கொடுப்பனவு கணித்தலின் துல்லியத்தன்மையினை சரிபார்த்தல்
8. சிரேஷ்ட முகாமையாளர்களினை ஆட்சேர்ப்பு செய்யாமைக்கான காரனங்கள்
9. IBSL யினால் வழங்கப்பட்ட புதிய திசைப்படுத்தல்கள்
10. CEO க்கு வழங்கபட்ட மிகை ஊதியத்திற்கான நியாயப்படுத்தல்கள் மற்றும் அடிப்படைகள்
11. YF PLC யின் இவ் ஆண்டுக்கான கையகப்படுத்தல்கள்
12. ஆண்டு காலப்பகுதியில் இலாபத்தன்மை குறைவடைந்ததற்கான காரணங்கள்

***(05 புள்ளிகள்)***

| *அத்தியாயம் 05 - இடர் மதிப்பீடு மற்றும் கணக்காய்வு செயல்முறை* |
|---|

**(b)**

மோசடியினை தடுப்பதற்கும் அதனை கண்டுபிடிப்பதற்குமான முதல் பொறுப்பு நிறுவனத்தின் முகாமைக்கும் ஆளுகைக்கு பொறுப்பானவவர்களும் ஆகும்.

SLAuS இற்கு இணங்க கணக்காய்வினை மேற்கொள்ளும் கணக்காய்வாளர் நியாயமான உறுதிப்பாட்டினை நிதிக்கூற்றுகள் தொடர்பில் பெற்றுக்கொள்ள வேண்டும். இவ் நியாயமான உறுதிப்பாடு என்பது நிதிக் கூற்றுக்கள் என்று முழுமையாக பார்க்கும்போது மோசடி,

தவறுகளிலிருந்து பொருண்மையாக விடுபட்டிருத்தல் வேண்டும்.

கணக்காய்வின் உள்ளார்ந்த வரையறையின் காரணமாக சில பொருண்மையான பிழைகள் கண்டுபிடிக்கப்படாமல் போகலாம் இது ஒரு தவிர்க்கமுடியாத இடராகும் மேலும் இவை ஏற்படுத்தும் தாக்கங்களின் தன்மை மிக அதிகமாகும்.

மோசடி மிக நவீனமுறையில் ஒழுங்கமைக்கப்பட்டும் காணப்படலாம்.

மேலும், மோசடியானது தனிப்பட்டவர்களின் கூட்டாக முன்னெடுக்கப்படலாம். முகாமைத்துவத்தினால் முன்னெடுக்கப்படும் மோசடிகளை கண்டுபிடிப்பது கடினமாக அமையும் இதற்கு காரணம் முகாமைத்துவம் கணக்கீட்டு பதிவுகள் மற்றும் கட்டுப்பாடுகளை மீறக் கூடிய மட்டத்தில் இருப்பதாகும்.

எனவே, கணக்காய்வாளர் பின்வரும் கணக்காய்வு செயல்முறைகளை செய்வதன் மூலம் இடரினை குறைத்துக் கொள்ள முடியும்.

- மோசடியின் காரணமாக நிதிக் கூற்றுக்களில் காணப்படும் பொருண்மையான பிழைகளுக்கான இடர்களை அடையாளம் காணல்
- மோசடியின் காரணமாக ஏற்படும் பொருண்மையான பிழை தொடர்பான மதிப்பிடப்பட்ட இடருக்கான போதுமானதும் பொருத்தமானதுமான கணக்காய்வு சாண்றுகளை பெற்றுக் கொள்ளல்
- கணக்காய்வின் போது சந்தேகப்பட்டு அடையாளம் காணப்பட்ட மோசடிக்கு பொருத்தமான துலங்களை செய்தல்

***(05 புள்ளிகள்)***

***அத்தியாயம் 05 - இடர் மதிப்பீடு மற்றும் கணக்காய்வு செயல்முறை***

**(c)**

1. **YF PLC** யின் நிதிக் கூற்றுக்களின் மூலகங்கள்
2. பாவனையாளர்கள் கூர்ந்து கவனம் செலுத்தக் கூடிய ஏதாவது விடயங்கள் காணப்படுகிறதா என்பதை உறுதிப்படுத்தல்
3. **YF PLC** யின் தன்மை, துறைசார் மற்றும் பொருளாதார நிலைமை
4. அளவுகோளின் தொடர்புடைய மாற்றமடையக்கூடிய தன்மை
5. நிறுவனத்தின் உரிமைக் கட்டமைப்பும் நிதியீட்டமும்

***(04 புள்ளிகள்)***

aat SRI LANKA

**(d)**
***பின்வருவனவற்றில் ஏதேனும் இரண்டினை இனங்கண்டிருப்பின் முழு மதிப்பெண்கள் வழங்கப்படும்.***

1. நிதித் துறையோடு தொடர்புடைய கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் குறிப்பான துறைசார் நடைமுறைகள்.
2. CBSL மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட துறைக்கான ஒழுங்குபடுத்தல் சட்டகம்
3. **YF's** யின் தொழிற்பாட்டினை பாரியளவில் பாதிக்கும் சட்டங்கள் மற்றும் ஒழுங்குபடுத்தல்கள்
4. ஒழுங்கமைக்கப்பட்ட துறைக்கான ஒழுங்கமைப்பு சட்டகம்
5. மத்திய வங்கி போன்ற ஆளுகை நிறுவனங்களின் தேவைப்பாடுகள்
6. மூலதனத்தின் போதுமான தன்மை போன்ற துறைசார் குறித்த சட்டத் தேவைப்பாடுகள்
7. நிதிக் கம்பனிகளின் வரியியல்
8. அரச கொள்கைகள் தற்போதுள்ள நிதி வணிகங்களான நாணயம், வெளிநாட்டு நாணயமாற்று கட்டுப்பாடுகள், இறை, நிதி ஊக்குவிப்புக்கள் மற்றும் வரிகள் மற்றும் வியாபார கட்டுப்பாட்டு கொள்கைகள் பாதிக்கும் விதம்
9. **YF's** யின் வணிகம் மற்றும் அதனது துறையை பாதிக்கும் ஆளுகை தேவைப்பாடுகள்
10. வணிகத்தினையும் அதனது துறையையும் பாதிக்கும் சூழல் தேவைப்பாடுகள்
11. சுழற்சி அல்லது பருவகால செயற்பாடு
12. கேள்வி, அளவு மற்றும் விலைப் போட்டி என்பவற்றை உள்ளடக்கிய சந்தை மற்றும் போட்டி
13. வணிகத்தின் உற்பத்திப் பொருள் தொடர்பான உற்பத்தி தொழில்நுட்பம்

***(05 புள்ளிகள்)***

***அத்தியாயம் 07 - கணக்காய்வு அறிக்கை***

**(e)** பின்வருவனவற்றில் ஏதேனும் ஐந்தினைக் குறிப்பிட்டிருப்பின் முழு மதிப்பெண்கள் வழங்கப்படும்.

1. **YF** யின் இற்றைப்படுத்தப்பட்ட கிடைக்கத்தக்கத்தாக உள்ள இடைக்கால நிதிக் கூற்றுக்களை ஆய்வு செய்து கலந்துரையாடுதல்

2. பங்குதாரர்கள் கூட்டங்களின் அறிக்கைகளை வாசித்தல், இயக்குனர்களுடனான கூட்டறிக்கைகள் மற்றும நிதி நெருக்கடி காலங்களில் இடம்பெற்ற முக்கியமான குழுக்களின் கூட்டறிக்கைகள்

3. **YF's** யின் வழக்கறிஞர்களை வழக்குகள், கோரிக்கைகள் தொடர்பாக விசாரணை செய்தல்

4. தொடர்புடைய மற்றும் மூன்றாம் நபர்களோடு நிதி தேவைப்பாடுகளை பராமரிப்பதற்கு இருத்தலின் உறுதிப்படுத்தல், சட்டரீதியான தன்மை, ஏற்பாடுகளின் அமுலாக்கம்

5. உரிய ஆவணங்களுடன் போதுமான மூலதன விகிதத்தினை மதிப்பிடல்

6. நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மையினை பாதிக்கும் நிறுவனத்தின் பிந்தியகால



aat SRI LANKA

நிகழ்வுகளினை மீள்பார்வை செய்தல்

7. கடன் பெற்றுக் கொள்ளும் வசதிகளின் போதுமானதன்மை, நிலைத்திருத்தல், வாசகங்களினை சரிபார்த்தல்

8. ஊடீளுடு போன்ற நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குபடுத்தல் செயல்களின் அறிக்கைகளை மீள்பார்வை செய்தல்

9. காசுப்பாய்ச்சல், இலாபம் மற்றும் ஏனைய தொடர்புடைய எதிர்பார்க்கைகளை ஆய்வு செய்து முகாமைத்துவத்துடன் ஆலோசனை செய்தல்

10. தனிச்சங்கள் / தொகுதிக் கடன்கள் மற்றும் கடன் பத்திரங்களின் வாசகங்களை மீள்பார்வை செய்து இவ் வாசகங்கள் மற்றும் நிபந்தனைகள் மீறப்பட்டுள்ளதா? என்பதை உறுதிப்படுத்தல்

11. மேலதிக நிதியினை வழங்கும் நபர்களின் நிதி இயலுமையினை மதிப்பிடல்

12. பூர்த்தி செய்யப்படாத வாடிக்கையாளர் கட்டளைகளை கருத்தில் கொண்டு கம்பனியின் நிலையினை கருத்தில் கொள்ளல்

13. திட்டமிடப்பட்டு அகற்றப்பட்ட / விற்பனை செய்யப்பட்ட சொத்துக்களின் போதுமான துணைத்தன்மையினை தீர்மானித்தல்

***(06 புள்ளிகள்)***

***(மொத்தம் 25 புள்ளிகள்)***

aat SRI LANKA

***Notice:***

These answers complied and issued by the Education and Training Division of AAT Sri Lanka constitute part and parcel of study material for AAT students.

These should be understood as Suggested Answers to question set at AAT Examinations and should not be construed as the "Only" answers, or, for that matter even as "Model Answers". The fundamental objective of this publication is to add completeness to its series of study texts, designs especially for the benefit of those students who are engaged in self-studies. These are intended to assist them with the exploration of the relevant subject matter and further enhance their understanding as well as stay relevant in the art of answering questions at examination level.

*© 2021 by the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka). All rights reserved. No part of this document may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without prior written permission of the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*